**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**
**ஸ்ரீரங்கம்**
**OS.No.933/2019**

**நாள்.18.07.2025**

**பெயர் திருமதி. சகாயமேரி க/பெ. ஆரோக்கியசாமி (வயது /2025)**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

**1. எதிரிருரைக்கு விவரம் சொன்னது யார் என்றால் நானும் எனது வீட்டுகாரும் சேர்ந்துதான் சொன்னோம். எதிருரையில் கண்டுள்ள விவரங்கள் சரியென படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தோம் . முதல் விசாரணை விவரங்கள் யார் சொன்னார்கள் எனது கணவர் சொல்லிதான் தயார் செய்தோம் அதில் கண்டுள்ள விவரங்கள் சரியானவை . நான் பிரதிவாதி தரப்பு சான்றாவனம் பி.வா.,சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ம் இந்த வழககில் தாக்கல் செய்துள்ள சொத்து விவரம் வெவ்வெறானதா என்றால் ஆமாம் . வழக்கு சொத்தை வைத்து எத்தனை பேரிடம் கடன் வாங்கியிருந்தோம் எத்தனை பத்திரங்கள் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் இரண்டு பேரிடம் கடன் வாங்கினோம். ஒரு பத்திரம் நிறைவேற்றினோம். மேற்படி பத்திரம் கிரைய பத்திரமா என்றால் கடனுக்காக கிரையம் பன்னினோம்.**

**2. எனது கணவர் ஆரோக்கியசாமி கிறிஸ்டோபருக்கு எழுதிக்கொடுத்தட கிரைய பத்திரமா என்றால் சரியல்ல (தலைமை ஆசிரியர்) ஆரோக்கியசாமிக்கு கூடலிங்கம் பவர் எழுதிக்கொடுத்தோம் அவர்தான் கிறிஸ்டோபருக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார். தாவா சொத்து எனது கணவரான ஆரோக்கியசாமி கூடலிங்கத்திற்கு கிரையம் செய்து கொடுத்தரா என்றால் சரிதான் . அந்த பத்திரம்தான் வா.சா..ஆ.3 . வா.சா.ஆ.3 ல் விற்றவராக காட்டியுள்ளது எனது கணவரின் புகைப்படம் என்றால் சரிதான் . எனது கணவர்தான் பத்திரத்தில் கையொப்பம் செய்துள்ளார். சாட்சி தன்னிச்சையாக கூடலிங்கத்திற்கும் எனது கணவர் ஆரோக்கியசாமிக்கும் வரவு , செலவு இருந்ததால் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தார். கூடலிங்கத்திடமிருந்து தலைமை ஆசிரியர் ஆரோக்கியசாமிக்கு ஒரு பவர் பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது . மேற்படி தலைமை ஆசிரியர்ஆரோக்கியசாமி வாதியாக கிறிஸ்டோபருக்கு கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்.**

3. என்னிடம் காட்டப்படும் . வா.சா.ஆ.1 தலைமை ஆசிரியர் ஆரோக்கியசாமி வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரம் என்றால் சரிதான் . கூடலிங்கம் தலைமை ஆசிரியருக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரம்தான் வா.சா–ஆ–2 என்றால் சரிதான் . என் கணவர் தலைமை ஆசிரியர் ஆரோக்கியசாமிக்கு ஒரு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்ததாக சொல்கிறோம் அது என் கைவசம் உள்ளதா என்றால் இருக்கிறது . மேற்படி பத்திரம் பதிவு செய்யப்பட்ட பத்திரம் என்றால் சரிதான் . மேற்படி என் கணவர் தலைமை ஆசிரியருக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தை பார்த்தால் ரூ .50 இலட்சம், ரூ.30 இலட்சம் கடன் பற்றிய விவரங்கள் தெரியவரும் என்றால் தெரியவரும் . அந்த பவர் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யததாற்கு காரணம் இல்லை என்றால் கேட்கததால் தாக்கல் செய்யவில்லை .நான் அந்த பத்திரத்தை தாக்கல்செய்ய தயராக உள்ளேன் என்றால் சரிதான்.

4. வாதி ஒரு பைனான்சியர் என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . அவர் யார், யாருக்கு எவ்வளவு கடன் கொடுததார் என்று விவரம் தெரியுமா என்றால் தெரியாது . என்னிடம்காட்டப்படும வா.சா.ஆ.5 தான் எனது கணவர் தாவா சொத்தை வாங்கியதற்கான ஆவணம் என்றால் சரிதான் . என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 பிராசாத் என்பவரிடம் என் கணவர் சொத்தை ஈடு காண்பித்து கடன் பெற்றதற்கான ஆவணம் என்றால் சரிதான் . எனக்கும் எனது கணவருக்கும் கடன் பத்திரம் , கிரைய ஆவணம், பவர் பத்திரம் என்றால் என்னவென்று தெரியும். பொதுவாக கிரைய பத்திரம் பதியும் போது பதிவாளர் கிரையத்திற்கான தொகையை பெற்றுக்கொண்டீர்களா என்றும் என்ன பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளீர்கள் என்று கேள்வி கேட்டு பதிலை பெற்றுக்கொண்ட பின்னர்தான் பத்திரம் பதியப்படும் என்றால் சரிதான் . நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அனைத்து பத்திரங்களும் அவ்வாறு கேள்விகேட்டு பதியப்பட்ட பத்திரங்கள் என்றால் நான் கேட்கும்போதே கிரையம் பத்திரம் ஏழுதிக்கொடுங்கள் உங்களுக்கு நான் வட்டிக்கு பணம் தரவேண்டும் சொன்னதால்தான் நாங்கள் பதிவாளர் அலுவலத்தில் ஒத்துக்கொண்டோம் . மேற்படி சார்வதிவாளர் அலுலவலகத்தில் மேற்படி கிரைய பத்திரங்கள் என்றும் அதற்கான தொகையை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்று சொன்னது பொய்யா என்றால் ஆம் பொய்தான் . உங்களுக்கு வேண்டுமென்றால் பொய் சொல்வேனா என்றால் இல்லை. அப்படி சொல்லமாட்டேன். எப்போதுமே ்உண்மைதான் பேசுவேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரம் கிரைய பத்திரம் சார்பதிவாளர் கேட்கும்போது உண்மை சொன்னேன் என்றால் சரிதான்.

5.என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 8,674 சதரடியை கிரையம் செய்தபோது என்னை மிரட்டி வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சார்பதிவாளரிடம் என்னை மிரட்டி வாங்கியதாக குறிப்பிட்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ–10 ஆவணம் பிரசாத் என்பவருக்கு கடன் தீர்த்து ரத்து செய்யப்பட்ட பத்திரம் என்றால் சரிதான் . எனது பிரமாண வாக்குமூலத்திலும் எதிருரையிலும் எங்கள் வட்டார வழக்கப்படி கடன் வாங்கினால் கிரையம் பத்திரம்தான் எழுதிக்கொடுப்போம் என்று சொல்லியுள்ளீர்களா என்றால் சரிதான். எங்கள் ஊரில் யார், யார், கடன் வாங்கி யார், யாருக்கு கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்ற விவரம்எனக்கு தெரியாது என்றால் சரிதான் . இதுவரை அதுபோல் கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்து ரத்து செய்ததை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திகைப்படுகிறது )

Sd/–xxxx

Taken down by me in open court , read over
to her and accepted by her as correct and
made is her signature

Sd/–xxxx

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam

Advocate